**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.362/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | சின்னசாமி, காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Father's/Husband Name: | மூக்கன் |
| Village : | மங்களமேடு |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
(**எதிரி சம்சாத் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது வி.களத்தூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 16.03.2019ம் தேதி பெரம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது பெரம்பலூர் வட்டம், குரும்பலூர் கிராமம், பள்ளிவாசல் தெருவில் வசிக்கும் அப்துல் ஹக்கீம் மனைவி ஜரினாபேகம் என்பவர் வீட்டிலிருந்து உறவினர் இறப்பிற்கு சென்ற போது ஆஜர் எதிரி அவருடைய வீட்டின் பூட்டை உடைத்து அவர் வீட்டு பீரோவில் வைத்திருந்த நகைகளை திருடியதாகவும் அவற்றின் மதிப்பு 80,000/– இருக்குமென்றும் சொல்லி வீட்டில் திருடிய ஆஜர் எதிரியையும் திருடப்பட்ட வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து ஆஜர் படுத்தினார்கள்.

புகார்தாரர் கொடுத்த புகாரைப் பெற்று பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 193/2019 , இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

16.03.2019ம் தேதி 18.15 மணிக்கு புகார்தாரர் ஆஜர்படுத்திய எதிரியின் மீது வழக்கு பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்த்ததில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை 19.30 மணிக்கு கைதிற்கான காரணம் கூறி கைது செய்து எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் ஆஜர் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை சாட்சிகள் நிஷாத்பாபு, யாசானுல்லா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

1. நெக்லஸ் ஒன்று சுமார் 2 $^{1/4}$ பவுன்

2. கல் வைத்த தோடு 2 ஜதை (4 தோடுகள்) சுமார் 1 $^{1/4}$ பவுன்

3. கம்ப்யூட்டர் தோடு 1 ஜதை (2 தோடுகள்) சுமார் 1 $^{1/2}$ பவுன்

4. மூக்குத்தி 1 ஜதை (2 எண்ணிக்கை) சுமார் 1 கிராம்

ஆகியவற்றை தான் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தக்க பாராவசம் ஒப்படைத்து அடைப்பு காவலுக்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பி வைத்தேன். மேற்படி நகைகளை புகார்தாரர் மனு செய்து பெற்று கொண்டுவிட்டார்.

அதன்பிறகு அன்றைய தினம் 19 மணிக்கு சம்பவயிடம் சென்று அங்கிருந்த சாட்சிகளான அமீன், தரீம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி அதில் உள்ள விவரங்களை மேற்படி சாட்சிகளுக்கு படித்துக் காட்டிய பிறகு அவர்களிடம் கையெழுத்து பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவைகள் **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் ஜெரினாபேகம், முகம்மது நாசர், ராமச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது 28.09.2019ம் தேதி பிரிவுகள் இதச. 454, 380 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ஜெரினாபேகம் கொடுத்த தகவலின் பேரில் முதல் தகவல் அறிக்கையில் பாடாலூரில் உள்ள உறவினரின் வீட்டிற்கு செல்ல வீட்டை பூட்டி விட்டு காலை சுமார்

8 மணியளவில் சென்றுவிட்டோம் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மதியம் ஒரு மணிக்கு புகார்தாரரின் வீட்டின் பூட்டை எதிரி உடைத்துவிட்டு சுமார் 40 வயது மதிக்கத்தக்க பர்தா போட்ட பெண் ஒருவர் வீட்டிற்குள் சென்று வெளியே வரும்போது பொதுமக்கள் பார்த்து அவரை பிடித்து விசாரணை செய்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு விசாரணை செய்த பொது மக்களின் பெயர்களை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1ன் பிரிவு 161(3) கு.வி.மு.ச வாக்குமூலத்திலும் மேற்கண்ட விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் நகலை அ.சா.1க்கு கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் புகார்தாரரின் கையொப்பம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்திருந்தால் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் நகலை புகார்தாரருக்கு கொடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு செய்யவில்லை என்பதால் தான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

எத்தனை மணிக்கு நான் சம்பவயிடம் சென்றேன் என்றால் 19 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகுமென்றால் சுமார் 15 நிமிடம் ஆகும். சம்பவயிடத்திற்கு நான் சென்ற போது உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் பூட்டை ஏதேனும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. உண்மையிலேயே சம்பவத்தில் பூட்டு உடைக்கப்பட்டிருந்தால் அதில் உடைக்க பயன்படுத்தப்பட்டிருந்த ஆயுதத்தையும், பூட்டையும் நான் கைப்பற்றியிருப்பேன் என்றாலும் அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1ன் வீட்டிலிருந்த பீரோவை திறக்க பயன்படுத்திய சாவியை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கு சென்று எவ்வளவு நேரம் நான் அங்கிருந்தேன் என்றாலும் எத்தனை சாட்சிகளை விசாரணை செய்தேன் என்றாலும் சுமார் 15 நிமிடம் சம்பவயிடத்தில் இருந்தேன், அங்கு 6 சாட்சிகளை விசாரித்தேன். மீண்டும் நிலையத்திற்கு எப்போது திரும்பினேன் என்றால் 19.30 மணிக்கு திரும்பினேன். நான் சம்பவத்தன்றே சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்றே சாட்சிகளை விசாரணை செய்திருந்தால் வாக்குமூலங்கள் அனைத்தும் கால தாமதமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் அன்றைய தினமே

நான் விசாரணை செய்யவில்லை என்பதால் தான் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை 10.10.2019ம் தேதிக்கு நீதிமன்றத்திற்கு கால தாமதமாக அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல.

எந்த ஒரு வாக்குமூலங்களை பதிவு செய்தாலும் தாளில் வலது ஓரத்தில் தான் காவல் அதிகாரி கையொப்பமிடுவது வழக்கம் என்றால் பொதுவாகவே இடது பக்கத்தில் தான் பதவி பெயர் மற்றும் முத்திரையிடுவார்கள். நான் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலங்களில் சாட்சிகளின் கையொப்பம் இடைவெளி விட்டு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் இரவு சமயத்தில் எந்த பெண் காவலர் இருந்தார் என்பதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி தானாக முன்வந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் நாங்களே ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பவமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கெதிராக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.